# 47

# சிறு பிள்ளைகளை ஆசீர்வதித்தல்

## (19:13-15)

*இந்தக் காட்சி திருமணத்தைக் குறித்து இயேசு விவாதித்துக் கொண்டிருந்ததன் இயல்பான ஒரு தொடர்ச்சி (19:1-12). அது இங்கே இடம் பெறக் காரணம் தலைப்புக்காகவா அல்லது கால வரிசைப்படுத்துதலுக்காகவா? நாம் நிச்சயமாகக் கூற முடியாது. பரிசேயர்களைக் குறித்த உவமை மற்றும் ஆயக்காரனைக் குறித்த உவமை நிகழ்ச்சிகளுக்குப் பிறகு லூக்கா இந்தக் காட்சியை எழுதியுள்ளார் (லூக்கா 18:15-17). மத்தேயு புத்தகத்தின் முந்தின அதிகாரத்தில், சிறுபிள்ளைகளை தமது பாடத்தின் உதாரணமாக பயன்படுத்தி இயேசு போதித்தார் (18:1-6, 10); ஆனால் இந்த நிகழ்வில் சிறு பிள்ளைகளின் நலனுக்காக அவர்களைக் குறித்து விவாதிக்கப்படுகின்றனர்.*

### சிறுபிள்ளைகளின் வருகை (19:13)

**13 அப்பொழுது சிறுபிள்ளைகளின் மேல் அவர் கைகளை வைத்து ஜெபம் பண்ணும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்.**

**வசனம் 13. சிறுபிள்ளைகளுக்கு** இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை (இதிலிருந்து *paidion*) பெரும்பாலும் குழந்தைகளுக்கும் தளர் நடையாய் நடக்கும் பிள்ளைகளுக்கும் குறிப்பிடப்படும். ஆயினும் சில வசனப்பகுதிகளில், இதே வார்த்தை சற்று வளர்ந்த குழந்தைகளுக்கும் குறைந்த பட்சம் பன்னிரெண்டு வயது பிள்ளைகள் வரைக்கும் பயன்படுத்தப்படுகிறது (மாற்கு 5:39, 42). லூக்கா குறிப்பிடுகையில் ஜனங்கள் "அவர்களுடைய குழந்தைகளையும் ஆசீர்வதிக்கும்படி கொண்டு வந்திருந்தார்கள்" என்கிறார் (லூக்கா 18:15). ஒருவேளை வித்தியாசப்பட்ட வயதுடைய குழந்தைகளையும் பிள்ளைகளையும் கொண்டு வந்திருந்திருக்கலாம். மாற்கு லூக்கா இருவருமே முற்றுப் பெறாத காலத்தை குறிப்பிட்டு, "கொண்டு வந்தனர் [கொண்டு வந்து கொண்டிருந்தனர்]" என்று எழுதியுள்ளனர், குறிப்பிட்ட காலம் வரைக்கும் தொடர்ந்து குழந்தைகள் அவரிடத்தில் வந்து கொண்டிருந்தனர் என்பதை இது சுட்டிக் காட்டுகிறது (மாற்கு 10:13; லூக்கா 18:15).

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை இயேசுவிடம் கொண்டு வந்ததற்கான காரணமும் சொல்லப்படுகிறது: சிறு பிள்ளைகளின் மேல் **அவர் கைகளை வைத்து ஜெபம் பண்ணும்படிக்கு கொண்டு வந்தார்கள்.** சிறுபிள்ளைகளின் மேல் கைகளை வைத்து ஜெபம் பண்ணுதலாகிய பழக்கம் யாக்கோபு காலத்து

*சம்பவத்துக்கு நம்மை பின்னோக்கி கொண்டு செல்லுகிறது, அங்கே அவர் தமது பேரப்பிள்ளைகளின் மேல் கைகளை வைத்து ஆசீர்வாதங்கள் அவர்கள் மேல் வரும்படி பேசினார் (ஆதியாகமம் 48:14-16). இயேசுவின் நாட்களிலும் இந்த வழக்கம் இருந்திருக்க வேண்டும். பிள்ளைகளை ரபீமார்களிடத்திலோ மற்றும் நன்கு அறிந்த போதகர்களிடத்திலோ பிள்ளைகளைக் கொண்டு வந்து அவர்களின் கைகளை அவர்கள் மேல் வைத்து ஆசீர்வதிக்கும்படி செய்தனர்.[1] தால்முத்லிருந்து எடுத்து எழுதப்பட்ட ஒரு சிறிய துண்டுப் பிரதியின் பிற்கால பாரம்பரியம் இந்தக் கண்ணோட்டத்தை ஆதரிக்கிறது:*

> *அதேபோல எருசலேமில் தங்களுடைய இளம் குமாரர்களையும் குமார்த்திகளையும் உபவாச நாளில் தங்களைத் தாங்களே வருத்திக் கொள்ளத் தக்க வகையில் பயிற்றுவிக்கும் அழகான பழக்கமிருந்தது, பதினோராம் வயதிலும் அதன் மதிய நாள் வரையிலும், பன்னிரெண்டாம் வயதில் நாள் முழுவதும் மற்றும் பதிமூன்றாம் வயதில் (பையன்) சிரமமாக கொண்டு போகப்பட்டு ஒவ்வொரு மூப்பருக்கு முன்பாகவும் நிறுத்தி அவனை ஆசீர்வதிக்கவும் அவனுக்காக ஜெபிக்கவும் தோரா (முதல் ஐந்து) புத்தகங்களை வாசிக்கத் தகுதிப்படுத்தவும் நற்கிரியைகளில் ஈடுபடவும் பயிற்றுவிக்கப்பட்டனர்.[2]*

*இயேசுவிடம் தங்கள் பிள்ளைகளைக் கொண்டு வந்தவர்கள் அவர்களுடைய நலனை விரும்பினார்கள், பிரதான போதகராகிய இயேசுவின் அனுமதியும் ஊக்கமும் தங்களுடைய குமாரர்களும் குமார்த்திகளும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.*

## *சீஷர்களின் பிரதிபலிப்பு (19:13ஆ)*

***[13ஆ]கொண்டு வந்தவர்களை சீஷர்கள் அதட்டினார்கள்.***

***வசனம் 13ஆ.*** *அநேக ஜனங்கள் தங்களின் அநேகம் பிள்ளைகளை இயேசுவிடம் கொண்டு வந்த காட்சி* ***சீஷர்கள்*** *அக்கரையோடு ஜனங்கள் வருவதை தடுக்க விரும்பினதற்கான காரணத்தை விளக்கப்படுத்துகிறது. சீஷர்கள் இதை மிகவும் ஊக்கத் தோடு செய்தனர் என்பதை அந்த வார்த்தை குறிப்பிடுகிறது.* ***அதட்டினார்கள்*** (*epitimaō*) *எனும் வார்த்தை மிரட்டுவதை குறிப்பிடும் சொல். சீஷர்கள் வியப்படையச் செய்யும் இப்படியோரு காரியத்தைச் செய்யக் காரணம் என்ன, இயேசு ஏற்கனவே ஒரு சிறுபிள்ளையைத் தம் முன்பாக நிறுத்தி தாழ்மையைக் குறித்துப் போதித்திருந்தார் (18:1-4). இயேசுவின் பணி போதிப்பதும் சுகமளிப்பதும் இந்தக் குழந்தைகளை தம்மிடம் வரவழைப்பதைக் காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அல்லது எருசலேமுக்குப் போக வேண்டிய இயேசுவின் பயணத்தை இந்த ஜனங்களே தாமதப்படுத்துவதாகவும் அவர்கள் எண்ணியிருக்கலாம்.*

## *இயேசுவின் ஆசீர்வாதம் (19:14, 15)*

***[14]இயேசுவோ: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு***

**இடங்கொடுங்கள்; அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொல்லி,**

[15]**அவர்கள் மேல் கைகளை வைத்து, பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போனார்.**

**வசனம் 14.** பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இயேசு ஆசீர்வதிக்கும்படி அவரிடத்தில் கொண்டு வந்தபோது, அவர் எப்பொழுதும் கிருபையாக அவர்களை ஏற்றுக் கொண்டார். அவர் தம்முடைய சீஷர்களிடத்தில், **சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்** என்றார். அதட்டினவர்கள் அதட்டப்பட்டார்கள். கர்த்தர் அவர்களைப் பார்த்து "வருத்தமடைந்தார்" (மாற்கு 10:14). அவர் ஏற்கனவே சீஷர்களிடத்தில் பரலோகத்துக்குப் போக விரும்புகிற எவனும் "மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆக வேண்டும்" என்று போதித்திருந்தார் (18:3). தொடர்ந்து அவர் **பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது** என்றார். இன்னொரு வார்த்தையில் சொன்னால், சிறு பிள்ளைகளைப் போன்ற தாழ்மையும் மனபாங்கும் கொண்டு உறுதியான நம்பிக்கையுடையவர்களாகிய ஜனக் கூட்டத்தால் பரலோகம் நிறைந்திருக்கும்.

இந்த வசனம் சிறுபிள்ளைகளின் ஞானஸ்நானத்திற்கு மதிப்பளிப்பதில்லை; உண்மையில், அதை இப்போதனை தவிர்க்கிறது. இயேசு இந்த சிறுபிள்ளைகளை ஞானஸ்நானப்படுத்தவில்லை; அவர் தம் கைகளை அவர்கள் மேல் வைத்து அவர்களை ஆசீர்வதித்தார். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் எனும் கோட்பாட்டை இங்கேயோ அல்லது புதிய ஏற்பாட்டில் வேறு எந்த இடத்திலுமோ குறிப்பிடப்படவில்லை. அப்படி செய்யப்பட்டதற்கான ஆதார வசனமும் எங்கும் காணப்படுவதில்லை. காரணங்கள் மிகத் தெளிவு: குழந்தைகள் பாவக்குற்றமுள்ளவர்களல்ல, ஞானஸ்நானமோ "பாவ மன்னிப்பிற்கென்று" கொடுக்கப்படுவது (நடபடிகள் 2:38). சிறு பிள்ளைகளுக்கு விசுவாசிக்கத் தெரியாது, மனந்திரும்பவோ, அறிக்கையிடவோ, ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளவோ அவர்களுக்குத் தெரியாது (மாற்கு 16:16; நடபடிகள் 2:38; 8:36-38; ரோமர் 10:9, 10).

குழந்தைகளை ஞானஸ்நானப்படுத்தும் பழக்கம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியது. கல்லறையில் எழுதப்பட்ட எண்ணற்ற வாசகங்களையும் வேறு சில சாட்சியங்களையும் அலசி ஆராய்ந்து, எவரெட் ஃபெர்குஷன் என்பவர் குழந்தைகள் மரித்துப் போவது அதிகமாக இருந்த நாட்களில் குழந்தை ஞானஸ்நானம் பெற்றோர்களுக்கு உறுதியளிக்கும் நோக்கத்துடன் துவங்கப்பட்டது என்றார். தங்களுடைய பிள்ளைகள் அதிக நாட்கள் உயிரோடிருக்க மாட்டார்கள் என்று எண்ணித்தான், தங்களுடைய சிறு பிள்ளைகள் தேவனுடைய ராஜ்யத்தில் பங்குள்ளவர்களா என்று அறிந்து கொள்ள விரும்பினர், எனவே அவர்களுக்கு ஞானஸ்நானத்தைக் கொடுத்தனர்.[3] ஆயினும் தேவன் தமது வசனத்தில் இப்படிப்பட்ட உறுதியை அளிக்கவில்லை. நாம் அவர்களைப் பற்றிய அக்கரையை அவருடைய அன்பின் விசுவாசத்துக்குள் விட்டு விடவேண்டும்.

**வசனம் 15.** சீஷர்களைக் கடிந்து கொண்டபின், இயேசு பிள்ளைகளை **அவர்களின்மேல் கைகளை வைத்து** ஆசீர்வதித்தார். மாற்கு இந்தக் காட்சியுடன்

அவர்களை அணைத்துக் கொண்டு ஆசீர்வதித்தார் என்று விளக்கப்படுத்துகிறார் (மாற்கு 10:16). பெற்றோர்களின் வேண்டுதல்படி அவர் ஜெபத்துடன் அப்படிச் செய்திருக்கக்கூடும் (19:13). பிள்ளைகளை ஆசீர்வதிக்கிற இந்த நிகழ்வைத் தொடர்ந்து, வேறொரு இடத்திற்குப் போக **அவர் அவ்விடம் விட்டுப் போனார்.**

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தல் (19:13-15)

தங்களுடைய பிள்ளைகளுக்கு சிறப்பானதையே விரும்பும் பெற்றோர் அவர்களை இயேசுவிடம் கொண்டு வந்து அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறச் செய்தனர். அப்போஸ்தலர்களால் உற்சாகமிழக்கச் செய்யப்பட்டாலும், அவர்கள் தங்களுடைய வருகைபற்றி மனதை மாற்றிக்கொள்ளவில்லை. கடைசியாக, இயேசு அவர்களுடைய பிள்ளைகளை ஆசீர்வதித்து ஜெபம் பண்ணினார், இன்றைக்கு, கிறிஸ்தவப் பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு சிறப்பானதை விரும்புகிறார்கள். நமது பிள்ளைகள் இயேசுவின் ஆசீர்வாதங்களை பெறும்படிக்கு அநேக விதங்களில் அவர்களை அவரிடம் கொண்டு வரலாம்: (1) அவர்களுடன் நேரத்தைச் செலவிடுங்கள், (2) முன் உதாரணமாயிருந்து உங்களைப் பின்பற்ற பாத்திரராய் நடந்து கொள்ளுங்கள், (3) தேவனுடைய வசனத்தை அவர்களுக்குப் போதியுங்கள், (4) வேத வகுப்புகளுக்கும் ஞாயிறு ஆராதனைக்கும் அவர்களைக் கூட கூட்டிச் செல்லுங்கள், (5) அவர்களுக்காக ஜெபியுங்கள், மற்றும் (6) கிறிஸ்துவின் ராஜ்யத்தில் அவர்கள் ஊழியர்களாகத் தக்கதாக அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

டேவிட் ஸ்டீவர்ட்

---

குறிப்புகள்

[1]David Hill, *The Gospel of Matthew,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 282. [2]Talmud *Soferim* 18.5. [3]Everett Ferguson, “Inscriptions and the Origin of Infant Baptism,” *Journal of Theological Studies* n.s. 30 (April 1979): 46.